Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 29, 2023

திங்கட்கிழமை மே 29, 2023 | ஒளி: 09 கதிர்: 006 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

## பிரமுகர் பிரிவில் கடும் சோதனை

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரமுகர்களுக்கான பிரிவில் சோதனைகளை முன்னெடுப்பதில் விசேட அவதானம் செலுத்துமாறு நிதி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2




### மகாவலி அதிகார சபையின் செயற்பாடு

## இன அழிப்பின் நீண்ட கால தந்திரம்



மகாவலி அதிகார சபையின் செயற்பாடு என்பது தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர்களின் இனப் பரம்பலை அழிப்பதற்கும் சிங்கள மக்களை தமிழர் தாயகப் பகுதிகளுக்குள் கொண்டுவருவதற்கும் தமிழர்களை இன ரீதியாக இல்லாமல் செய்வதற்குமான இன அழிப்பின் நீண்ட கால தந்திரமான செயற்பாடு என்றும் இதை முழுமையாக கண்டிப்பதாகவும் முழுமையாக எதிர்ப்பதாகவும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### பயங்கரவாத தடைச்சட்டத்தை

# இன்னும் இரத்து செய்யவில்லை

### சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி

இலங்கை அரசாங்கம் தனது கொடூரமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமான பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்வதாக பலமுறை உறுதியளித்த போதிலும் அதனை நிறைவேற்றவில்லை என்றும் சட்டத்தை தொடர்ந்தும“ பயன்படுத்துவது குறித்து, சர்வதேச மன்னிப்புச்சபை தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2


### நாளை நள்ளிரவு முதல்

## கோட்டா டபிள்



தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திர கியூஆர் முறைமையின் கீழ் வழங்கப்பட்ட வாராந்த எரிபொருள் கோட்டா இரட்டிப்பாகி உள்ளதுடன், புதிய ஒதுக்கீடுகள் செவ்வாய்க்கிழமை (30) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பௌத்தத்தை அவமதித்த நடாஷா கைதானார்

‘மோடாபிமானய’ என்ற நிகழ்ச்சியில் பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய ஞாயிற்றுக்கிழமை (28) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2





இன்று (29) ஆரம்பமாகும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை ஜூன் 8 ஆம் திகதி வரையிலும் நடைபெறும். இந்தப் பரீட்சை, 3,568 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. இதில், பாடசாலை விண்ணப்பதாரிகள் 3,94,450 பேரும், தனியார் பரீட்சார்த்திகள் 78,103 பேருமென மொத்தமாக 4,72,553 பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கின்றனர். இந்நிலையில், பரீட்சை நிலையங்களில் டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுக்கும் வகையில் புகை விசிறப்படுகின்றது.

## பரீட்சார்த்திகளுக்கு இடையூறு வேண்டாம்

### விசேட பஸ் சேவை முன்னெடுப்பு

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று (29) ஆரம்பமாகவுள்ள நிலையில், பரீட்சைக்கு முன்னுரிமை அளிப்பதுடன், பரீட்சார்த்திகளுக்கு இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகளில் பொதுமக்கள் ஈடுபட வேண்டாம் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர

தொடர்ச்சி P2




### ‘தேசத்தின் பிதா’ டி.எஸ்.சேனநாயக்க என்றால்

## ‘தேசத்தை காத்த தந்தை’ ரணில்

### ஏற்க வேண்டும் என்கிறார் ரங்கே பண்டார

க.அகரன்

டி.எஸ்.சேனநாயக்க ‘தேசத்தின் பிதா’ என்றால் ரணில் விக்கிரமசிங்கவை ‘தேசத்தை காப்பாற்றிய தந்தை’யாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் 2048 ஆம் ஆண்டு இந்த நாடு அபிவிருந்தி அடைந்த நாடாக மாறும் என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### ஆஸியில் இருந்து திரும்பிய

## யாழ். பயணியின் உயிர் ஆகாயத்தில் பிரிந்தது

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் விமான நிலையத்தில் இருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நோக்கி பயணித்த விமானத்தில் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.




தொடர்ச்சி P2



## வீட்டுக் கிணற்றில் விழுந்து சிறுமி மரணம்

நிதர்ஷன் வினோத்

பாதுகாப்பற்ற நிலையில் இருந்த வீட்டுக் கிணற்றில் விழுந்த சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மிருசுவில் வடக்கு, மிருசுவிலைச் சேர்ந்த சசிகரன் கிங்சிகா (வயது- 06) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தொடர்ச்சி P2

## பாலியல் சேஷ்டை விட்டவர் கைது

எம்.எஸ்.எம். ஹனீபா



அக்கரைப்பற்று பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மாணவியை வீதியில் வழிமறித்து, பாலியல் சேஷ்டை புரிய முயன்றமை மற்றும் மாணவியை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


## வரி வழக்குகளுக்கு தனி நீதிமன்றம்

வரி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக தனி நீதிமன்றமொன்றை நிறுவுவதற்கு யோசனை முன்மொழியப்பட்டு உள்ளதாகவும் குறித்த யோசனை அடுத்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜப்பானில் இருந்து வந்தார் ஜனாதிபதி

### புதிய தலைவரை நியமிக்க தீர்மானம்



சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ள நிலையில், வெற்றிடமாகியுள்ள பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவிக்கு ஒருவரை நியமிக்கவுள்ளார்.

தொடர்ச்சி P2



### ஷாஃப்டரின் பிரேத பரிசோதனை

## முழுமையான அறிக்கை 2 மாதங்களில் வரும்

கடந்த வருடம் மர்மமான முறையில் மரணமடைந்த வர்த்தகர் தினேஷ் ஷாஃப்டரின் சடலம் மீதான பிரேத பரிசோதனை குறித்த முழுமையான அறிக்கையை வெளியிடுவதற்கு இன்னும் 2 மாதங்கள் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கூரையின் மீதேறிய கைதி இறக்கப்பட்டார்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் கூரையின் மேலேறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட சிறைக்கைதி ஞாயிற்றுக்கிழமை (28) மதியம் சிறைச்சாலை அதிகாரிகளால் கீழே இறக்கப்பட்டுள்ளார்.

அவ்வாறு இறக்கப்பட்ட கைதி சிறைச்சாலையின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குற்றசெயல்களில் ஈடுபட்டு கைதாகி, குருவிட்ட சிறைச்சாலையில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தார். அதன்பின்னர், யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து தன்னை வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரி சனிக்கிழமை (17) மாலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டார். இந்நிலையில்,

தொடர்ச்சி P2



## தேர்தல் கோரி கொழும்பில் பாரிய போராட்டம்



தேர்தலை நடத்துவதற்கான போராட்டத்தை எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதியன்று மீண்டும் கொழும்பில் ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஹீட்டரை போட்டவர் மின்னல் தாக்கி மரணம்

தண்ணீர் சுடவைக்கும் இயந்திரத்துக்குள் (ஹீட்டர்) தண்ணீரை ஊற்றி, அதனை சூடாக்குவதற்காக சுவிட்சை அழுத்தியபோது, மின்னல் தாக்கி ஒருவர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொன்கஹருப்ப பிரதேசத்தில், வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்றுள்ளது. அதில், 66 வயதான ஆண்ணொருவரே மரணமடைந்துள்ளார். இவர், திருமணம் முடிக்காத ஒருவராவார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இன அழிப்பின் நீண்ட கால தந்திரம்

இவ்விடயம் குறித்து ஞாயிற்றுக்கிழமை (28) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மகாவலி அதிகார சபையால் முல்லைத்தீவு, வவுனியா, மாவட்டங்களில் 1988 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் 14 கிராம அலுவலர் பிரிவுகள் அபகரிக்கப்பட்டு யுத்தத்தில் மக்கள் இடம் பெயர்ந்த போது முழுமையாக அங்கு சிங்கள குடியேற்றங்களை நிறுவி வெலி ஓயா என்ற ஒரு புதிய பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கை பிரிக்கின்ற நோக்கத்துக்காக இந்த மகாவலி அதிகார சபை புதிய ஒரு பிரதேச செயலகத்தை உருவாக்கி பிற்பாடு கொக்கிளாய் முதல் செம்மலை வரை இருக்கின்ற 6 கிராம சேவகர் பிரிவுகளை அபகரிக்க முயற்சி எடுத்த போது எங்களுடைய தொடர் அழுத்தம் காரணமாக தற்காலிகமாக அந்த திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மகாவலி என்பது தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களையும் சிங்கள இனப்பரம்பலையும் செய்வதற்காக அரசாங்கத்தால் நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு செயல்பாடு.

அந்த வகையில் தற்பொழுது மகாவலி “J” வலயம் என்ற ஒன்றை புதிதாக உருவாக்குவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கும் 7 கிராம அலுவலர் பிரிவுகளும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் இருக்கின்ற 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளும் ,மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளடங்களாக மொத்தம் 37 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி மகாவலி அதிகார சபை புதிய வர்த்தமானி அறிவித்தல் செய்வதற்காக பிரதேச செயலகங்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இவ்விடயத்தை எதிர்த்து நான் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை முன் வைத்திருக்கிறேன். அதற்கு நீர்ப்பாசன அமைச்சர் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் போது பதில் அளிப்பதாக கூறியிருக்கிறார்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் இந்த திட்டம் என்பது தமிழர்களுடைய இன பரம்பலை அழிப்பதற்கும் சிங்கள மக்களை இங்கு கொண்டுவருவதற்கும் தமிழர்களை இனரீதியாக இல்லாமல் செய்வதற்கு இன அழிப்பின் ஒரு நீண்ட கால தந்திரமான செயல்பாடுதான் இந்த மகாவலி அதிகார சபையின் செயல்பாடு என்றார்.

# யாழ். பயணியின் உயிர் ஆகாயத்தில் பிரிந்தது

மெல்பேர்னிலிருந்து இருந்து சனிக்கிழமை (27) இரவு வந்தடைந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் யூஎல் 605 இலக்க விமானத்தில் உயிரிழந்த பயணியின் சடலம் கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட ரத்னலிங்கம் ராமலிங்கம் (வயது 75) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று விமான நிலைய கடமை அதிகாரி தெரிவித்தார்.

மெல்போர்ன் விமான நிலையத்திலிருந்து விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் பயணி நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார் என்றும் மெல்பேர்னுக்கு திரும்பாமல் கட்டுநாயக்காவுக்கு செல்ல தீர்மானித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சடலம் பின்னர், பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# வரி வழக்குகளுக்கு தனி நீதிமன்றம்

ருவன்வெல்லவில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், சட்ட நடவடிக்கைகளுக்கு தனி நீதிமன்றம் இல்லாததால் தற்போதுள்ள வரி தொடர்பான விவகாரங்களில் பாரிய தாமதம் ஏற்படுவதாக கூறினார்.

இதேவேளை, தற்போதைய வரி அறவீட்டில் நிலவும் பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை நீக்கி வரி செலுத்துதலை முறைப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வரி விதிப்பு முறையை சிறப்பாக செயல்படுத்தும் வகையில், ரேமிஸ் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மின்னணு முறை அமல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# இன்னும் இரத்து செய்யவில்லை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கடந்த மே 18ஆம் திகதியன்று குற்றவியல் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டியே மன்னிப்பு சபை இந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மேலும் நான்கு பேர் கைது செய்யப்படுவார்கள் என்று கொழும்பு நீதிவானிடம் பொலிஸார் தெரிவித்துள்ளதாகவும் சிறுபான்மையினரை குறிவைக்க இந்த சட்டம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது என்றும் மன்னிப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தவகையில் தன்னிச்சையான கைதுகளையும், விசாரணையின்றி நீண்டகாலமாக காவலில் வைக்க உதவும் வகையில் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும் சபை குறிப்பிட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்க உடனடியாகவும் பாரபட்சமின்றியும் நடத்தப்படுவதை உறுதி செய்யுமாறு சர்வதேச மன்னிப்புசபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

## கோட்டா டபிள்

20 லீற்றராக இருந்த கார்கள் மற்றும் வேன்களுக்கான வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு ஏப்ரல் பண்டிகை காலத்தில் 30 லீற்றராக அதிகரிக்கப்பட்ட நிலையில், எரிபொருள் அடுத்த வாரம் முதல் 40 லீற்றராக அதிகரிக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 14 லீற்றராக அதிகரிக்கப்படவுள்ளதுடன், பதிவுசெய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு வாராந்தம் 22 லீற்றர் எரிபொருள் வழங்கப்படும்.

இதேவேளை, ஆரம்பத்தில் 40 லீற்றராக இருந்து பின்னர் 60 லீற்றாக அதிகரிக்கப்பட்ட பஸ்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு, 125 லீற்றராக உயரவுள்ளதுடன், இந்த வாரம் முதல் மீண்டும் எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பௌத்தத்தை அவமதித்த நடாஷா கைதானார்

தேரர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தடைந்த அவர் விமான நிலைய அதிகாரிளால் கைது செய்யப்பட்டு கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

ஜயனி நடாஷா எதிரிசூரிய என்பவரைக் கைது செய்யுமாறு கொழும்பு, நாரஹேன்பிட்டிய கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்கிஸை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 32 வயதான நடாஷா, மலேசியா கோலாலம்பூரை நோக்கி ஞாயிறு (28) அதிகாலை 12.05க்கு புறப்படவிருந்த மலேசியா விமானச் சேவைக்குச் சொந்தமான எம்.எச்.178 என்ற விமானத்தில் பயணிப்பதற்கு சனிக்கிழமை (27) பின்னிரவு 11.30க்கு விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்தார்.

அந்தப் பெண்ணுடன் பயணிக்க வந்திருந்த ஹேன்நாயக முதியன்சலாகே பெத்தும் பண்டார எகொடவத்த என்பவர் நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டதன் பின்னர், தன்னுடைய பயணத்தை கைவிட்டுள்ளார்.

இவ்விருவரும் மலேசியா கோலாலம்பூருக்குச் சென்று அங்கிருந்து மற்றுமொரு விமானத்தில் சிங்கபூருக்குச் செல்லவிருந்தனர் என்றும் ஞாயிறு அதிகாலை 01.20 மணியளவில் நடாஷா கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாலியல் சேஷ்டை விட்டவர் கைது

சனிக்கிழமை (27) மாலை பிரத்தியேக வகுப்புக்கு சென்று வீடு திரும்பிகொண்டிருந்த மாணவியிடமே குறித்த நபர், பாலியல் சேஷ்டை புரிய முயன்றுள்ளார்..

தாக்குதலுக்குள்ளான மாணவி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்க ப்பட்டுள்ளதாகவும், மாணவியின் பெற்றோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு வீதிகளில் தொந்தரவு செய்பவர்களை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனால் பெண் மாணவிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு, சில மாணவிகள் கல்வியை இடைநடுவில் கைவிட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பெண் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில் குறிப்பாக உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் முடியும் நேரங்களில் விசேட போக்குவரத்து பொலிஸாரை சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாவும் தெரிவித்தார்.

## வீட்டுக் கிணற்றில் விழுந்து சிறுமி மரணம்

மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் ஒன்றில் கல்விப்பயிலும் மேற்படி மாணவி வீட்டிலிருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் சனிக்கிழமை(27) மாலை விழுந்துள்ளார்.

சிறுமியை காணாத நிலை தேடிய போது கிணற்றில் சிறுமி விழுந்தமை தெரிய வந்துள்ளது. சிறுமி உடனடியாக மீட்டு கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதன் பின்னர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர் எனினும், சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழந்துள்ளார்.

## தேசத்தை காத்த தந்தை ரணில்

வவுனியா, மில் வீதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தை ஞாயிற்றுக்கிழமை (28) திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐக்கிய தேசியக் கட்சியே 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்று தந்தது. சுதந்திரத்துக்கு பின்னரான 75 வருடத்தில் கடந்த 40 வருட காலம் யுத்தம் காரணமாக வடக்கிலும், தெற்கிலும் அபிவிருத்தி பாதிப்படைந்தது. 75 வருடத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம், ஜனாதிபதி ஆகியோர் வர முடியாத நிலை வந்ததால் இந்த நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதனால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இந்த பிரச்சினைகளை சவாலாக ஏற்று அதனை தீர்க்க முன் வந்தவர் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, டி.எஸ்.சேனநாயக்க தேசத்தின் பிதா என்றால் ரணில் விக்கிரமசிங்கவை தேசத்தை காப்பாற்றிய தந்தையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

## ஹீட்டரை போட்டவர் மின்னல் தாக்கி மரணம்

அவர் தனியாகவே வாழ்ந்து வந்துள்ளார். அந்த வீட்டுக்கு அருகருகே உறவினர்கள் சிலர் வசித்துவருகின்றனர். சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தபோது, மின்னல் தாக்கத்தினால் முதியவர் உடல் கருகி உயிரிழந்து கிடப்பதை கண்டுள்ளனர். இதுதொடர்பில் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவந்ததை அடுத்து சடலம் மீட்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர், இறுதி கிரியைகள் இடம்பெற்றுள்ளன.

## தேர்தல் கோரி கொழும்பில் பாரிய போராட்டம்

மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டுள்ளதால், தற்போதைய அரசியல் அமைப்பை மாற்ற விரும்பும் ஆயிரக்கணக்கான மக்களால் கொழும்பில் வெள்ளம் பாய்வதற்கு முன்னர் ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம் மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக குறிப்பிட்டார்.

அஹுங்கல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த அனைவரையும் எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதி தேர்தல்தல்கள் செயலகத்துக்கு அழைத்து வரவுள்ளதாக குறிப்பிட்டார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட போது பெரும்பான்மையான வாக்காளர்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இருந்ததாகவும் தற்போதைய அரசாங்கம் தேர்தலை தாமதப்படுத்த பல்வேறு தந்திரங்களை கையாண்டதாகவும் கூறினார்.

ஆளும் அதிகாரம் ஒரு பொது இயக்கத்துக்கு செல்வதைத் தடுக்க அரசாங்கமும் பிரதான எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பார்கள் என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூன்று மாதங்களாக பிற்போடப்பட்டிருப்பது மக்களின் உரிமைகளை மீறுவதாகும் எனவும் குறிப்பிட்டார்.

## பிரமுகர் பிரிவில் கடும் சோதனை

அதற்கமைய சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதாக சுங்க பேச்சாளர் சுதந்த சில்வா தெரிவித்தார்.

விமான நிலைய பிரமுகர்களுக்கான பிரிவை பயன்படுத்தி சிலர் தொடர்ச்சியாக சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும், அது தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், 3.5 கிலோகிராம் தங்கம் மற்றும் 91 அலைபேசிகளை சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வந்த போது, சுங்கத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு, அபராதம் செலுத்திய பின்னர் விடுவிக்கப்பட்டார்.

குறித்த தங்கம் மற்றும் அலைபேசிகளின் மொத்த பெறுமதி எட்டரை கோடி ரூபாவுக்கும் அதிகமென மதிப்பிடப்பட்டதுடன், 75 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டபின்னர் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

23ஆம் திகதி முற்பகல் டுபாயிலிருந்து நாடு திரும்பிய எம்.பி, தங்க பிஸ்கட்கள் மற்றும் அலைபேசிகளுடன் சுங்கப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சார்த்திகளுக்கு இடையூறு வேண்டாம்

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

பரீட்சை இடம்பெறும், அனைத்து பரீட்சை மத்திய நிலையங்களிலும் டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பரீட்சையையொட்டி மாணவர்கள், பரீட்சை நிலையங்களுக்கு செல்வதற்காக சிசுசெரிய பஸ் சேவையை முன்னெடுக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மிலான் மிரெண்டா தெரிவித்தார்.

சிசுசெரிய சேவையில் ஈடுபடும் சகல பஸ் பணியாளர்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் சாதாரண தரப் பரீட்சை முடியும் வரையில், இந்த பஸ் சேவையை தொடருமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

## முழுமையான அறிக்கை 2 மாதங்களில் வரும்

முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளதாகவும் சடலம் தொடர்பான மேலதிக பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்த கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ரொஹான் டி.ருவன்புர, முதற்கட்ட பரிசோதனை அறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

ஷாஃப்டரின் மரணத்துக்கான காரணத்தை விசாரிப்பதற்கு தடயவியல் நிபுணரான பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையில் பேராசிரியர் டி.சி.ஆர்.பெரேரா, பேராசிரியர் டி.என்.பி.பெர்னாண்டோ, கலாநிதி சவசுப்ரமணியம் மற்றும் கலாநிதி ருவன்புர ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

அந்த நிபுணர்கள் குழுவினால் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சடலத்தை தோண்டி எடுக்க வேண்டும் என்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதற்கமைய சடலத்தைத் தோண்டி எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து, கடந்த 25ஆம் திகதியன்று பொரளை மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த ஷாஃப்டரின் சடலம், தோண்டி எடுக்கப்பட்டு காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

52 வயதான ஷாப்டர், கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவரது காரின் சாரதி ஆசனத்தில், கழுத்தில் கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானில் இருந்து வந்தார் ஜனாதிபதி

சிங்கப்பூர் மற்றும் ஜப்பானின் அரச தலைவர்களை சந்தித்து கலந்துரையாடிய ஜனாதிபதி, ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற நிக்கேய் மாநாட்டில் உரை நிகழ்த்தியதுடன், அங்கு ஆசிய நாடுகள் பலவற்றின் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில், விஜயத்தை நிறைவு செய்து சனிக்கிழமை (27) இரவு நாடு திரும்பிய ஜனாதிபதி, தலைவர் பதவிக்கு ஒருவரை நியமிக்கவுள்ளார்.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான கடிதம் நிதி அமைச்சின் செயலாளரினால் ஜனக்க ரத்நாயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஜனக்க ரத்நாயக்க கடிதத்தை பொறுப்பேற்று கொண்டுள்ளார்.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஜனக்க ரத்நாயக்கவை நீக்குவது தொடர்பான யோசனை பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கூரையின் மீதேறிய கைதி இறக்கப்பட்டார்

ஞாயிற்றுக்கிழமை (28) மதியம் கீழே இறக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாத்தறையைச் சேர்ந்த புஷ்பகுமார (வயது 41) என்பவரே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு கீழே இறக்கப்பட்டார். அத்துடன் அவருடைய போராட்டமும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.




50 இலட்சம் ரூபாய் பெறுமதியான

## சொக்லேட், இனிப்பு வகைகள் கைப்பற்றல்

■ நீர்கொழும்பு நிருபர் ஷாஜஹான்

வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொக்லேட், இனிப்பு, சவர்க்காரம் என்பன நீர்கொழும்பு, பெரியமுல்லை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து, நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

விமானப்படையின் புலனாய்வு பிரிவால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து கம்பஹா நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் குறித்த வீட்டில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

தீர்வை செலுத்தப்படாமல் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சொக்லேட் உட்பட கைப்பற்றப்பட்டுள்ள பொருட்களுக்கு, 'ஸ்டிக்கர்' ஒட்டப்பட்டு, பல இடங்களுக்கும் சந்தேக நபரால் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மன்னார் மாவட்ட ஆராய்ச்சி தொகுப்பு

### மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிப்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் இடம் பெறும், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், பெண்கள் எதிர்கொள்ளும் மனநல ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் கடந்த மூன்று வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொகுப்பு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமேலிடம் வைபவரீதியாக கையளிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட சமூக செயற்பாட்டாளர் பேதுரு பெனடிக்றால் மேற்கொள்ளப்பட்ட குறித்த ஆய்வு, மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கிய நிலையில், ஆய்வுத் தொகுப்பின் இறுதி வடிவம் வைபவ ரீதியாக வெள்ளிக்கிழமை (26) கையளிக்கப்பட்டது.

குறித்த ஆய்வு தொகுப்பில், மாவட்ட ரீதியாக பெண்கள் எதிர்கொள்ளும் பால்நிலை சார் வன்முறைகள் தொடர்பிலும் பால்நிலை வன்முறைகளைத் தடுப்பது தொடர்பில் கையாளப்பட வேண்டிய அணுகுமுறைகள் குறித்தும் அறிக்கை இடப்பட்டுள்ளது.



## முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபராக கனகேஸ்வரன்

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசாங்க அதிபராக கடமையாற்றிவந்த க. விமலநாதன் 20.05.2023 அன்று அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய கனகசபாபதி கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபராக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## சின்ன இங்கிலாந்தில் டெங்கொழிப்பு

■ எஸ்.கணேசன்



சின்ன இங்கிலாந்து என்றழைக்கப்படும் நுவரெலியாவிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் டெங்கொழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலகமும், நுவரெலியா மாநகர சபையும் இணைந்தே இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

நுவரெலியாவில் டெங்கு பரவினால் அது சுற்றுலாத்துறைக்கு பெரும் தாக்கமாக அமையும் என்பதால் டெங்கு பரவக்கூடிய இடங்களை தூய்மைப்படுத்துமாறு மாவட்ட செயலாளர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன் முதற்கட்ட பணிகள், நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் மாவட்ட செயலாளர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள், தோட்ட நிர்வாகங்கள், கிராமியக் குழுக்களையும் இணைத்துக்கொண்டு நுவரெலியா மாவட்டம் முழுதும் டெங்கொழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## காஸ்வாய், ஏரியில் விழுந்து இளைஞன், பெண் மரணம்

■ சுதத் எச்.எம்.ஹேவா

கால்வாயில் விழுந்து பெண்ணொருவரும், ஏரியில் விழுந்து இளைஞனும் மரணமடைந்த சம்பவங்கள், மஸ்கெலியா, நோட்டன் பிரிஜ் ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளன.

மஸ்கெலியா, ஸ்டெஸ்பி தோட்டத்தில் கால்வாயில் சனிக்கிழமை (27) விழுந்து 51 வயதான லெட்சுமி பாலவிதன் என்ற பெண் உயிரிழந்துள்ளார். இந்தப் பெண் ஒருவகையான நோயால் பாதிக்கப்பட்டவர் என்று அவருடைய உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், நோட்டன் பிரிஜ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லொணெக் தோட்டத்தின் ஏரியில் ஞாயிற்றுக்கிழமை (28) விழுந்த 23 வயதான தோமஸ் ரூபன் மரணமடைந்துள்ளார்.

வட்டவளையில் இருந்து லொணொக் வரையிலும் பயணித்த பஸ்ஸில் பயணம் செய்த இவ்விளைஞன், பஸ்ஸில் இருந்து இறங்கி கங்கவத்த பிரதேசத்துக்குச் செல்வதற்காக நடந்து சென்றுக்கொண்டிருந்த போதே ஏரியில் விழுந்து மரணமடைந்துள்ளார்.

## நோர்வூட் பிரதேச செயலகத்தில் இன்று முதல் சேவை

■ செ.தி.பெருமாள்

தரமுயர்த்தப்பட்ட நோர்வூட் பிரதேச செயலகத்தில் அனைத்து சேவைகளையும் திங்கட்கிழமை (29) முதல் பெற்று கொள்ள முடியுமென நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட தெரிவித்தார்.

இதன் பிரகாரம், சாமிமலை, மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோர்வூட், டிக்கோயா, ஹட்டன் ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து மக்களும் கினிகத்ஹேன- அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் பெற்றுக்கொண்ட சேவைகளை, தரமுயர்த்தப்பட்ட நோர்வூட் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றார்.





## புனித சென்.ஜோசப் தேவாலய வருடாந்த திருவிழா

மஸ்கெலியா, புனித சென் ஜோசப் தேவாலய வருடாந்த திருவிழா வெகு சிறப்பாக ஞாயிற்றுக்கிழமை (28) கொண்டாடப்பட்டது. நிகழ்வில், கண்டி மாவட்ட ஆயர் திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

காலை முதல் வெகு சிறப்பாக பூஜைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அதனைதொடர்ந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ, தேவாலயத்தில் இருந்து வாகனத்தில் புறப்பட்ட திருச்சுருவ பவனி, நகரின் ஊடாகப பயணித்து, தேவாலயத்துக்கு திரும்பியது.

(செ.தி பெருமாள்)

## சகல மாணவர்களுக்கும் அரிசி வழங்க ஏற்பாடு

■ டி சந்ரு



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் காரணமாக ஊட்டசத்தின் தேவை மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதனை நிவர்த்திக்கும் வகையில், தோட்ட உட்கட்டமைப்பு நீர் வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமானால் தாய்வான் அரசோடு முன்னெடுத்த பேச்சுவார்த்தையின் பயனாக, அங்கிருக்கின்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் ஊடாக சுமார் 1,000 மெட்ரிக் தொன் அரிசி பாடசாலை மாணவர்களுக்கு கிடைப்பதற்கான வழியை அமைத்தார்.

அதில் ஒரு தொகுதி, நானுஓயா நாவலர், லிந்துல மௌசால, மட்டுக்கலை, அக்ரகந்த, தங்கக்கலை, கிரான்லி மேல் பிரிவு, டெல் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தலா 30 கிலோ கிராம் வீதம் ஞாயிற்றுக்கிழமை (28) வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ. பி சக்திவேல் மற்றும் உப தலைவர் எஸ். சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

## 'எக்டோ' நூலக வாரம் –2023 அங்குரார்ப்பணம்

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை கல்வி, கலாசார மேம்பாட்டுத் தாபனத்தானால் (எக்டோ) ஆரம்பிக்கப்பட்ட 'எக்டோ' நூலகத்தின் 20 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மாணவர்கள், வாசகர்களை நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளுதல், வாசிப்பு திறனை மேம்படுத்துதல் மற்றும் நூல்களை சேகரித்தல் போன்ற நோக்கங்களுக்காக 27.05.2023 தொடக்கம் 04.06.2023 வரை 'எக்டோ நூலக வாரம் - 2023' எனும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் (27) எக்டோ நூலகத்தின் கேட்போர் கூடத்தில் தாபனத்தின் தலைவர் எஸ். எல்.எம் றிசாத் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலியும் விசேட அதிதிகளாக கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் அதிபர் எம். எஸ்.எம் பைசால், கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஏ.ஜி. எம் றிசாத், கல்முனை அஷ்-ஷுஹறா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர் மஜீதியா, கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய பிரதி அதிபர் ஐ.எல்.எம் ஜின்னாஹ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

'எக்டோ நூலக வாரம் - 2023' காலப்பகுதியில், நூலகத்தில் புதிய அங்கத்தவர்களாக இணையும் மாணவர்கள், வாசகர்கள், அங்கத்துவத்தை புதுப்பிப்பவர்களுக்கு அங்கத்துவக் கட்டணம் இலவசமாக்கப்பட்டுள்ளது. புதிதாக இணைந்து கொள்ளும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக, 10 மாணவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. மேலும், மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், அதிபர் எம். எச்.எஸ்.ஆர் மஜீதியா, அப்துல் கபூர் ஞாபகார்த்த கல்லூரியின் பழைய மாணவி பாத்திமா நஸ்கத் ஆகியோரால் ஒரு தொகுதி நூல்கள் 'எக்டோ' நூலகத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

## புலமையாளர் கௌரவிப்பு விழா

■ வி.ரி.சகாதேவராஜா



இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியின் 'மகத்துவம் 2' எனும் புலமையாளர் கௌரவிப்பு மாண்புறு விழா அதிபர் எம் ஏ எம் பஜீர் தலைமையில் சனிக்கிழமை (27) இடம்பெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா, கௌரவ அதிதியாக பிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.எம். அப்துல் மஜீட், கோட்டக் கல்வி பணிப்பாளர் யூ.எல் மகுமூட்லெவ்வை, அட்டாளைச்சேனை தேசிய கல்வி கல்லூரி விரிவுரையாளர் ஏ.நளிம், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் கலந்து சிறப்பித்தனர்.

இறக்காமம் கோட்டத்தில் அதிகூடிய 158 புள்ளிகளை பெற்ற ஏ.எம். பாத்திமா நுஸைபா உள்ளிட்ட சித்தி பெற்ற 23 மாணவருக்கும் பதக்கமும் கேடயமும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பெற்றோர் சார்பில் ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.ஏ முனாவ் அதிதிகள் மற்றும் அதிபருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

கன்னங்குடா வீதியை புனரமைக்குமாறு கோரி

## பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

■ வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கன்னங்குடா பிரதான வீதியை புனரமைத்துதருமாறு கோரி, பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கன்னங்குடா பிரதான வீதியானது, நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் குறித்த வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

'வாக்குறுதிகளைப்பெற்று மக்களை ஏமாற்றாதே', 'கன்னங்குடா மக்கள் மக்களில்லையா', 'ஏமாற்றாதே ஏமாற்றாதே! மக்களை ஏமாற்றாதே' உட்பட பல்வேறு கோரிக்கைகளை தாங்கிய பதாகைளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த வீதியை புனரமைப்பதற்கு பணம் இல்லையென்று வீதி அபிவிருத்தி திணைக்களம் தெரிவிக்கும் நிலையில், வேறு பகுதிகளில் வீதி புனரமைப்புகள் நடைபெற்றுவரும் நிலையில், அங்கு வீதியை புனரமைப்பதற்கு எவ்வாறு நிதி வருகின்றது எனவும் மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

# தடைதாண்டலுக்கு தடைகளை ஏற்படுத்தாதீர்கள்

'அநியாயம் காலமும் நேரமும் வீணாகிக்கொண்டிருக்கின்றது' என்று நினைப்போரில், கல்விப் பொதுத் தராதர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளும் அடங்குகின்றனர். பரீட்சைகள் அட்டவணையின் பிரகாரம், வருடாந்தம் டிசெம்பர் மாதம் நடைபெறும் சாதாரணதர பரீட்சை, கொரோனாவுக்குப் பின்னரான நெருக்கடிகளை அடுத்து, ஐந்து மாதங்கள் கடந்து, இன்று (29) நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகின்றது.

சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் காலதாமதத்தால், ஏனைய வகுப்புகளான தரம்-1, தரம்-6 ஆகியவற்றுக்கு மாணவர்களை உள்ளீர்த்துக்கொள்வது பல பாடசாலைகளுக்கு பெரும் நெருக்கடியாகவே இருந்தது. இடநெருக்கடி, போதியளவான இடவசதிகள் இல்லாத பாடசாலைகள், இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டன. உரிய காலத்துக்குள் பரீட்சைகள் நடத்தப்படாவிடின் மாணவர்கள் மத்தியில் ஒருவகையான விரக்தி ஏற்படும்.

மாதங்கள் நீடித்துக் கொண்டே செல்வதால், தனியார் வகுப்புகளுக்கு தங்களுடைய பிள்ளைகளை அனுப்பும் பெற்றோரின் செலவு, பல மடங்குகளாக அதிகரித்துவிடும். எனினும், தங்களுக்கு இரண்டொரு மாதங்கள் கூடுதலாக கிடைத்துவிட்டது என எண்ணி, விடுபட்ட பாடங்களை கற்றுக்கொண்ட மாணவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஜூன் 8 ஆம் திகதி வரையிலும் நடைபெறும் இந்தப் பரீட்சை, 3,568 மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது. இதில், பாடசாலை விண்ணப்பத்தாரிகள் 3,94,450 பேரும், தனியார் பரீட்சார்த்திகள் 78,103 பேருமென மொத்தமாக 4,72,553 பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கின்றனர். பரீட்சை பணிகளுக்காக 35,000 ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், வட்டரெக்க சிறைச்சாலை கைதிகள் ஐவரும், வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் ஐவருமென 10 கைதிகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் மேலதிக ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். பரீட்சைக்குத் தோற்றும் கைதிகளுக்காக வட்டரெக்க மற்றும் மெகசின் சிறைச்சாலைகளில் பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 10 கைதிகளில், வாழ்நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதியொருவரும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பரீட்சைகளில் தடை தாண்டல் முக்கியமானது. ஆகையால், பரீட்சார்த்திகள் நேரகாலத்துடன் பரீட்சை மண்டபத்துக்குச் செல்வது அவசியமாகும். தனியார், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் கூடுதலாக ஒத்துழைப்பு நல்கவேண்டும். பரீட்சை மண்டபங்களுக்கு அருகில், இக்காலப்பகுதியில் எவ்விதமான கேளிக்கைகள் மற்றும் வைபவங்களுக்கு இடமளிக்கக்கூடாது. எவ்விதமான தடைகளையும் ஏற்படுத்தாது. தடையைத் தாண்டுவதற்கு ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும். பரீட்சை முடிந்தவுடன் விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளும் துரிதவேகத்தில் முன்னெடுக்கப்படவேண்டும்.

பரீட்சையை எழுதிய மறுநாளில் இருந்தே, அடுத்த கட்டத்துக்கு காலடி எடுத்துவைக்கவேண்டும். இன்று (29) சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் அனைவரும் சித்தியடைந்து, அடுத்தடுத்த கட்டங்களுக்கு செல்லவேண்டுமென நாமும் வாழ்த்துகின்றோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கல்விதான் முதற்படி; அதை ஆவலுடன் கற்றால்த்தான், வாழ்க்கையில் அடுத்தபடி முன்னேற்றத்தை அடையமுடியும். கல்வி கற்கும் காலத்தை வீணடித்தால், வாழ்க்கையில் பெறுதற்கரிய கொடைகளை இழந்துவிட நேரிடும்.

இன்றைய காலத்தில், பெரும்பாலான மாணவமாணவிகள், படிப்பதில் ஆர்வத்துடன் இயங்குகின்றார்கள். எனினும் மாணவர்கள் பலருக்கும் வசதியின்மை தடைக்கல்லாக உள்ளது.

நவீன கல்விமுறையில் மேலோங்க, பணம் தேவையானது. நூல்கள், கணினி, பிரத்தியேக வகுப்புகளில் பங்குபற்றிட, நிதிவளம் ஒரு பிரச்சினையாக இருக்கின்றது.

முன்னைய காலம்போல் தற்காலம் இல்லை. செலவுகள் அதிகரித்து விட்டன. எனவே வசதி குறைந்த மாணவர்களுக்காக அரசாங்கம் போதிய நிதி ஏற்பாடுகளை அளிக்க வேண்டும். கல்வித்துறை போட்டி மிக்கதாய் அமைந்துவிட்டது. ஏழை மாணவர்களை உயரவைக்க, சமூகம் உதவுதல் கட்டாயமானது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது அணுகுமுறையை

# மீள்பரிசீலனை செய்ய வேண்டும்



என்.கே அஷோக்பரன்
Twitter: @ nkashokbharan.com

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு, தையிட்டி பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புத்த விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி, மே மாத ஆரம்பத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சிறிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர். போராட்டம் ஆரம்பமான காலப் பகுதியானது, வெசாக் நிகழ்வுகள் இடம்பெற்ற காலப்பகுதியாகும்.

எட்டரை ஏக்கர் காணியில் இராணுவத்தினரால் 'திஸ்ஸ விகாரை' என்ற இந்தப் புத்த விகாரை தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான முடிக்கலசம் வைக்கும் நிகழ்வு, ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நடைபெற்றதாக அறியக் கிடைக்கிறது.

ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டம், மே மாதம் மூன்றாம் திகதிதான் தொடங்கியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான சிறியளவிலான போராட்டக்காரர்கள், 14 குடும்பங்களுக்கு சொந்தமான அண்ணளவாக 100 பரப்பு காணியை விடுவிக்க கோரியும் சட்டவிரோதமாக கட்டப்பட்ட பௌத்தக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும் பௌத்தமயமாக்கல் திணிப்பை எதிர்த்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம், மே மூன்றாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை நடைபெற்றது.

விகாரை வழிபாட்டுக்கு இடையூறு விளைவிக்கக்கூடாது என்ற மல்லாகம் நீதிமன்றின் கட்டளையைத் தொடர்ந்து, போராட்டம் கைவிடப்பட்டதாக ஊடகப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. மே ஐந்தாம் திகதி இரவு எட்டு மணியளவில் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அறிவித்தார். மேலும், அப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடிய பின்னர், அடுத்தக்கட்ட செயற்பாடு தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், மே 23ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட சிறியளவிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், மீண்டும் தையிட்டி விகாரை அமைந்த பகுதியில் தமது போராட்டங்களை ஆரம்பித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொலிஸாரால் மல்லாக்காகத் தூக்கிச் செல்லப்பட்டு தாக்கப்பட்டதாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு, தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள 15 குடும்பங்களின் உறுதி பத்திரம் உள்ள காணியே இது என்றும், இங்கு இராணுவத்தினர் அடிக்கல் வைத்த வேளை, அது தொடர்பில் கேட்ட போது, "அவ்வாறு தனியார் காணியில் விகாரை அமைக்க முடியாது" என்று அதிகாரிகள் உறுதி அளித்திருந்ததாகவும், ஆனால், அங்கே தற்போது விகாரை அமைக்கப்பட்டு உள்ளதாகவும், இவ்வாறான நிலையில், கடந்த 23 ஆம் திகதி தாங்கள் அங்கே போராட்டத்தை முன்னெடுத்து இருந்ததாகவும், அதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை பொலிஸார் தாக்கியுள்ளதாகவும், பாராளுமன்ற அமர்வு வாரம் என்பதால், அவரைக் கைது செய்வதில் சிக்கல்கள் இருந்தமையால் அதற்குப் பதிலாக அங்கிருந்த, சட்டத்தரணி சுகாஸ் உள்ளிட்ட ஒன்பது பேரை கைது செய்ததாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டிருந்தார்.

தனியார் காணியெனில், அதில் 'சட்டவிரோமாக' விகாரை கட்டப்பட்டிருந்தால் அது தவறு. அமைதியான வழியில் போராடுபவர்கள், நீதிமன்ற கட்டளையை மீறாதவரை, அந்தப் போராட்டத்தை பொலிஸார் தடுப்பதும் தவறு. அநீதியான வகையில் கைதுகள் இடம்பெற்றிருந்தால் அதுவும் தவறு. இவையெல்லாம் சட்ட விரோத காரியங்கள்.

ஆனால், இவை எல்லாவற்றையும் மேவி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரிடம் சில கேள்விகளைக் கேட்க வேண்டியதாக உள்ளது.

முதலாவதாக, தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணி எனும் போது, அதில் விகாரை கட்டப்படும் வரை, அதன் உரிமையாளர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அல்லது அதுவரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ன செய்து கொண்டிருந்தது?

சரி, தனியார் காணியில் சட்டவிரோதமாக இராணுவம் விகாரை அமைக்கிறது என்றால், அதனை சட்டரீதியாக காணி உரிமையாளர்கள் ஏன் எதிர்க்கவில்லை. நேரடியாக சட்டத்தின் உதவியை நாட, அவர்களுக்கு வழியில்லை என்றால், 'லோயர்ஸ்' என்று மேற்சட்டைக் 'கொலரை'த் தூக்கிக்காட்டும் சட்டத்தரணிகள் உள்ள, சட்டத்தரணி உடையில் போராட்டத்தில் பங்கேற்கும் சட்டத்தரணிகள் உள்ள, பொலிஸார் காரை மறிக்கும் போது சட்டத்தரணி அடையாள அட்டையை நீட்டிக் காட்டி, அதிகாரம் செய்யும் சட்டத்தரணிகள் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஏன் அம்மக்களுக்கு சட்ட உதவியை அளிக்கவில்லை?

இன்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று ஒரு புதுப்பெயரைச் சூடியிருந்தாலும், அவர்கள் தேர்தலைச் சந்திப்பது, இலங்கையின் மிகப்பழைமையும், பாரம்பரியமும் மிக்க 'அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்' என்ற கட்சியில் தான்.

ஜீ.ஜீ பொன்னம்பலம் என்ற தன்னிகரில்லா குற்றவியல் வழக்குரைஞர் தொடங்கிய கட்சி. எத்தனை சிறந்த, மிகப்பெரும் ஆற்றல் கொண்ட சட்ட மரபைக் கொண்டதொரு கட்சி; எதையும் சட்டரீதியியாக அணுக முடியாது, பத்துப் பேரைச் சேர்த்து 'போராட்டம்' நடத்தும் நிலைக்கும், ஒரு சட்டத்தரணி, பொலிஸாருக்கு தனது மேற்சட்டைக் 'கொலரை' தூக்கிக்காட்டி, "லோயர்ஸ் ஆ... லோயர்ஸ்" என்று சொல்லும் தாழ் நிலையில் இருப்பது, தமிழ்த் தேசிய அரசியலின் வறட்சி நிலையை வெளிக்காட்டி நிற்கிறது என்றால் அது மிகையல்ல.

இது சட்டரீதியாகவும், முளையிலேயே அணுகப்பட்டிருக்க வேண்டியதொரு பிரச்சினை. தனியார் காணியை, இராணுவம் வலுக்கட்டாயமாக சுவீகரிக்க முடியாது. அரசு சுவீகரிப்பதானால், அதற்கு சட்டரீதியான தகுந்த வழிகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றாது அரசு வலுக்கட்டாயமாக தனியார் காணியைச் சுவீகரிக்க முடியாது.

இல்லை! இந்நாட்டின் சட்டம் தமிழர்களைக் காப்பாற்றாது என்று அரசியல் வியாக்கியானத்தை தமிழ்த் தேசிய முன்னணியினர் முன்வைக்கலாம். குறித்த பிரச்சினையைத் தீர்க்க சட்டத்தை அணுகாது, சட்டம் தமிழர்களைக் காப்பாற்றாது என்று சொல்வதில் நியாயமில்லை.

ஒருவேளை முறையாக சட்டத்தை அணுகி, அதில் அநீதி இழைக்கப்பட்டால், அதற்கெதிராக ஜனநாயக ரீதியில் குரல்கொடுப்பதில் நியாயமுண்டு. ஆனால், வெற்று வியாக்கியானங்கள் சொல்லிக்கொண்டு, வங்குரோத்து அரசியல் செய்வதில் அர்த்தமில்லை.

2018இல், மைத்திரிபால சிரிசேன, அரசியலமைப்புக்கு விரோதமாக மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கி, பாராளுமன்றத்தை அரசியலமைப்புக்கு விரோதமாகக் கலைத்தபோது, அதற்கெதிரான முதல் வழக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் எழுப்பப்பட்டிருந்தது. தமிழ் மக்கள் உள்ளிட்ட இந்நாட்டின் மக்கள் பாதிப்படையக்கூடிய சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களிலும், அதனை அரசியலமைப்பு ரீதியலாக சவாலுக்குட்படுத்தி, அந்த வழக்கை முன்னின்று வாதாடியதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான ம.ஆ சுமந்திரனின் பங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய எந்தவொரு சட்டரீதியிலான முன்னெடுப்பையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செய்திருக்கிறதா என்று கேட்க வேண்டியதாக இருக்கிறது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்ற தனிநபரின் நேர்மையும், கொள்கைப்பிடிப்பும் மட்டும் ஒரு கட்சியினதும், அந்தக் கட்சி பிரதிநிதித்துவம் செய்யும் மக்களினதும் உய்வுக்குப் போதாது என்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் விரைவில் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தப் பத்தியின் நோக்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுக்கும் இராணுவத்தினரின் காணி அபகரிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை கேள்வி கேட்பதல்ல; மாறாக, பத்துப் பேர் சேர்ந்து நின்று செய்யும் ஆர்ப்பாட்டங்களைத் தாண்டி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பரந்துபட்ட அரசியல் செயற்பாடுகள் என்ன என்பதை அக்கட்சி மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவதுதான்.

கொள்கைப் பற்று என்பது, வெறும் கொள்கையை நூறுமுறை கத்திக் கத்தி சொல்வதும், வீராவேசம் கொள்வதும், பகட்டாரவாரப் பேச்சுகள் செய்வதும், தீ பறக்கும் அறிக்கைகள் விடுவதும், ஐ.நாவில் அறிக்கை வாசிப்பதும், பொலிஸ்காரர்களுக்கு சவால் விடுவதும், கைதுசெய்யப்பட்டு சிறை சென்ற செம்மல்களாக முயல்வதும் எல்லாம் அல்ல;

இதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் புரிந்துகொண்டால், அது அவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் நல்லது. இந்த அரசியல் சித்து விளையாட்டுக்களைத்தாண்டி, தாங்கள் மூச்சுக்கு 300 முறை உச்சரிக்கும் தமிழ்த் தேசியம் உய்வதற்கும், தமிழ் மக்கள் உய்வதற்கும் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பற்றி சிந்திப்பதும் அவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் சிறப்பானதாக அமையும்.

## கடிதங்கள்

### பொலிஸாரின் துணையுடன் சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட ஊரியான், முரசுமோட்டை, கண்டாவளை, கல்லாறு ஆகிய பகுதிகளில், தொடர்ச்சியான சட்டவிரோத மணல் அகழ்வுகளால் பறவைகள் சரணாலய பகுதி அழிவடையும் அபாய நிலை தோன்றியுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆனையிறவு கடல் நீர் ஏரி முதல் தட்டுவன்கொட்டி, ஊரியான், உப்பாறு, கண்டாவளை, புளியம்பொக்கனை, கல்லாறு, சுண்டிகுளம் வரைவான பகுதிகள், பறவைகள் சரணாலயமாகக் காணப்படுவதுடன் மே, ஜூன் மாதங்கள் முதல் வெளிநாட்டு பறவைகளின் வருகையும் வளமையாகும்.

இந்த நிலையில், குறித்த பறவைகள் சரணாலய பகுதியில் உள்ள கண்டல் தாவரங்கள், பற்றைக் காடுகள் அழிக்கப்பட்டு தினமும் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக, ஊரியான், உப்பாறு, கோரக்கண் கட்டு ஆகிய பகுதிகளில் தினமும் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், குறித்த பகுதிகளுக்கு தினமும் வருகை தரும் கிளிநொச்சி பொலிஸார் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுடன் சமரசம் செய்து விட்டு செல்லும் நிலையே காணப்படுவதாக பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

மே மாதம் மூன்றாம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், குறித்த விடயங்கள் தொடர்பாக பொது அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டாலும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. வளங்களை அழித்து, மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறாரகள்.

யது பாஸ்கரன்

விவசாயிகளின்

# அவலம்

**பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதன் மூலம், இளைஞர்களையும் சேற்றில் கால்பதிக்க வைக்கமுடியும்**





எப். முபாரக்

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் வெவ்வேறு வகையான விவசாயச் தொழிற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆனால், பிரதான விவசாயச் செய்கையாக நெல் வேளாண்மை காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், நெல் வேளாண்மைச் செய்கைகள் பிரதானமாகும். இம்மாகாணத்தில் நூற்றுக்கு ஐம்பது சதவீதம் நெல் செய்கை பண்ணப்படுகின்றது.

இதிலும் இரண்டு போகங்கள் காணப்படுகின்றன. மழையை நம்பி வேளாண்மை செய்வது 'பெரும் போகம்' எனவும், குளத்து நீரை நம்பிய வேளாண்மை 'சிறு போகம்' எனவும் அழைக்கப்படுகின்றது. பெரும் போகம் பெரும்பாலும் நவம்பர் தொடக்கம் ஏப்ரல் வரையிலும் சிறு போகம் மே தொடக்கம் ஒக்டோபர் வரையிலும் மேற்கொள்ளப்படும்.

திருகோணமலை மாவட்டத்தில் பெரும் போகம் 42,642 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், சிறுபோகம் 24,256 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும் செய்கை பண்ணப்படுகின்றன.

ஒரு விவசாயி மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்கை மேற்கொண்டு, அதை அறுவடை செய்ய சுமார் மூன்று முதல் நான்கு மாதங்கள் ஆகின்றன. இக்காலப்பகுதியில் அந்த விவசாயி பல்வேறு வகையான துயரங்களை அனுபவிக்கின்றான்.

வரம்பு செதுக்குதல் முதல், நெல் அறுவடை வரை, பல இலட்சம் ரூபாய் செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அறுவடையின் போது கிடைக்கும் இலாபமோ மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கு, பல்வேறு வகையான பௌதீக, அரசியல், இயற்கை காரணிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

### நெல்லுக்கான விலையில் தளம்பல்

தற்போது அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களில் அறுவடை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இதில் சம்பா, சிவப்பு, பச்சை, கட்டை சிவப்பு போன்ற நெல் வகைகள் காணப்படுகின்றன. இதில் ஒவ்வொன்றுக்கும் அரசாங்கம் வெவ்வேறு வகையான விலைகளை நிர்ணயித்துள்ளது. ஆனால், அரசாங்கம் நிர்ணயித்த விலைகளுக்கு விவசாயிகள்



வழங்குவதற்கு முடியாத நிலையில் உள்ளார்கள்.

காரணம், முதலீட்டுச் செலவுகள் கூடுதலாகக் காணப்படுவதுடன் பெற்றுக்கொள்ளும் இலாபமோ, மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் முதலாளிமார்களின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. பத்து ரூபாயையேனும் குறைத்து, விவசாயிகளிடம் இருந்து நெல்லை சுரண்டுகின்ற தன்மை, தற்போது மேலோங்கி காணப்படுகின்றது.

இங்கு, விவசாயிகள் வயல் வேலைக் காலங்களில் வயலில் உழுவதற்கும், வரம்பு கட்டுவதற்கும், நெல் விதைப்பதற்கும், கிருமி நாசினிகளை பெற்றுக்கொள்வதற்கும், பசளை வாங்குவதற்கும், வயல் அறுவடை செய்வதற்கும் என பல இலட்சங்களை நெல் முதலாளிமார்களிடமே பெற்றுக்கொள்ளுகின்றார்கள். இதனால் அறுவடை செய்கின்ற நெல்லை, முதலாளிமாருக்கு குறைந்த விலைக்கே வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றார்கள்.

இந்த அவலநிலை, மாற்றியமைக்கப்படல் வேண்டும். விவசாயத்தில் முதலாளிமாரின் சுரண்டலை இல்லாமல் செய்வதற்கு, அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### பசளை பிரச்சினைகள்

நாட்டில் விவசாயிகள், பதாகைகளைத் தாங்கிய வண்ணம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றார்கள். பசளையைப் பெற்றுத்தருமாறும் நெல்லுக்கான உத்தரவாத விலைகளைக் கோரியும் விவசாயிகளுக்கு சலுகைகளை பெற்றுத்தருமாறும் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு மாவட்டத்தில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

வீட்டுத் தோட்டங்கள், சிறியளவிலான பயிர்ச் செய்கைகளுக்கு இயற்கை பசளை சாத்தியமாகும். ஆனால், ஏக்கர் கணக்கில் வேளாண்மை செய்கைக்கு இயற்கையான உரப்பயன்பாடு ஒரு போதும் சிறந்ததாக அமையாது. விளைச்சல் குறைவு, வேளாண்மை மஞ்சளாக மாறுதல், வளர்ச்சியின்மை, நோய்த்தாக்கங்கள் அதிகரிப்பு, எதிர்பார்க்கின்ற விளைச்சல் கிடைக்காமை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

### அதிகாரிகளின் அசமந்தப்போக்கு

விவசாயிகள் அவ்வப்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு, உரிய நேரத்தில், உரிய முறையில் தீர்வுகள் கிடைக்கப்பெறுவதில்லை. விவசாயத்துறையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் களத்துக்குச் சென்று, தீர்வு பெற்றுக்கொடுப்பது குறைவு. உதாரணமாக, கிருமிநாசினி பிரச்சினை, பயிர்களில் புழுக்களின் தாக்கம், இன்னோரன்ன பிரச்சினைகள் ஏற்படுகின்றபோதிலும், அதற்கான தீர்வுகளோ வழிமுறைகளோ பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை என திருகோணமலை மாவட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

### யானைகள், குரங்குகள் தொல்லை

விவசாயத்துறையில் மனிதனுக்கும் யானைகளுக்கும் இடையிலான மோதல் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. அதேபோன்று தான், குரங்குகளின் தொல்லையும் காணப்படுகின்றது. குரங்குகள் பயிர்ச்செய்கைகளுக்குள் புகுந்து, பல்வேறு சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. இதனாலும் விவசாயிகள் பாதிப்புகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

விவசாயிகள் குறைந்த மாதத்தில் அறுவடை செய்யும் புதிய நெல்லினங்களை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டங்களிலும் விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் நிலையம், விவசாய விரிவாக்கல் நிலையங்கள் என பெயர்ப்பலகைகள் மாத்திரமே காணப்படுகின்றன. தவிர, "புதிய நெல்லினங்கள் இல்லை; தம்புள்ளைக்கு செல்லுங்கள்" என்று, விவசாய அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் திருகோணமலை விவசாயிகளுக்கு கூறுகின்றார்கள்.

அரசாங்கம் விவசாயிகளுக்கென்று புதிய விவசாயக் கொள்கையை வகுத்து வெளியிட வேண்டும். விவசாயிகளின் காலடியில் சென்று நெல் வர்க்கங்களை அறிமுகப்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு மானிய உதவித் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியதோடு, விவசாயிகளின் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும்.

அத்தோடு புதிய நெல் வர்க்கங்களை அறிமுகப்படுத்த நடமாடும் சேவைகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு போகத்திலும் புதிய நெல்லினங்கள், விவசாய இயந்திர தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தி அறிமுகப்படுத்த வேண்டும்.

### கிருமி நாசினி பாவனை

விவசாயத்துக்கு கிருமிநாசினி பாவனை மிகவும் இன்றியமையாததாகும். ஒவ்வொரு விவசாயச் செய்கைக்கும் வெவ்வேறு வகையான கிருமி நாசினிகள் தேவைப்படுகின்றன.

வேளாண்மைச் செய்கையில், அரக்கொட்டியான் தாக்கம் நெற்செய்கைக்கு ஏற்படுமாக இருந்தால், அதற்கு எந்தவிதமான கிருமிநாசினியோ மருந்துகளோ செல்வாக்கு செலுத்துவது குறைவு.

கடந்த வருடம், திருகோணமலை மாவட்டத்தில் அறக்கொட்டியான் தாக்கம் வெகுவாக அதிகரித்ததால் அறுவடையின் போது, வெறும் பதர்களே காணப்பட்டன. இதற்கு மருந்துகளே இல்லை; நாட்டில் எரிபொருட்கள் டீசல், பெற்றோலுக்கு விலை அதிகரித்ததால் கிருமி நாசினி, பசளைகளும் விலை அதிகரிக்கின்றது. அதேவேளை நெல்லுக்கான விலை அதிகரிக்கவில்லை. அதே நிலை தான் தற்போது காணப்படுகின்றது.

### விவசாயிகளின் பிரச்சினைகளும் தீர்க்கப்படல் வேண்டும்

இவ்வாறு விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதன் மூலம், விவசாயத்துறையில் இன்னும் இளைஞர்கள் கால்பதித்து, நாட்டை விவசாய பசுமை பொருந்திய தேசமாக மாற்றியமைக்க முடியும். நாடும் விவசாயிகளும் வளத்துடன் வாழும் நிலை உருவாகும்.



MICROSOFT IMAGINE CUP 2023 இல்

# இலங்கை சார்பாக இரு அணிகள்

Microsoft Imagine Cup 2023இல் சர்வதேச மட்டத்தில் போட்டியிடுவதற்கு இலங்கையின் Sipsara மற்றும் The Green Tycoon ஆகிய அணிகள் தகைமை பெற்றுள்ளன. வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய வழிமுறைகளை கட்டியெழுப்புவதற்காக Microsoft இனால் முன்னெடுக்கப்படும் மாணவர்களுக்குரிய சர்வதேச போட்டியாக Microsoft Imagine Cup அமைந்துள்ளது. உலகின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தமது தொழில்முயற்சியாண்மை திறன்களை வெளிப்படுத்தவும், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் காணப்படும் மிகவும் சிக்கல் நிறைந்த விடயத்துக்கு தொழில்நுட்பசார் தீர்வொன்றை கட்டியெழுப்ப வழிகோலும் வகையிலும் அமைந்துள்ளது. மூன்று பிராந்தியங்களின் 48 அணிகளில் இலங்கையின் இரு அணிகளும் அடங்கியுள்ளன.



கல்விப் பிரிவில் போட்டியிட்டிருந்த SLIIT ஐச் சேர்ந்த Sipsara அணியால், e-பயிலல் கல்விக் கட்டமைப்பு down syndrome குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. Artificial Neural Networks மற்றும் Machine Learning போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, முதலாவது இணைய அடிப்படையிலான அப்ளிகேஷன் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அதனூடாக down syndrome குறைபாடுடைய சிறுவர்களின் திறன்கள் கணிப்பிடப்பட்டு, அவற்றை மேம்படுத்திக் கொள்வதற்கு வினைத்திறனான முறையில் முன்னெடுக்கக்கூடிய செயற்பாடுகள் பற்றிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

புவி எனும் பிரிவின் கீழ், SLIIT இன் Green Tycoon திட்டத்தினூடாக, CarboMeter ஒன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறுவனங்களுக்கு தமது காபன் இலக்குகளை கண்காணித்து, காபன் வரிகளை குறைத்து பசுமையாக திகழ்வதற்கு ஊக்குவிக்க உதவும் மொபைல் அடிப்படையிலான காபன் வெளியீட்டு முகாமைத்துவ கட்டமைப்பாக அமைந்துள்ளது.

போட்டி தொடர்பில் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கையில், இரண்டு அணிகளைச் சேர்ந்த மாணவர்களும் தமக்கு கிடைத்த வாய்ப்பு தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்டதுடன், தமது தொழில்நுட்ப திறனை இது போன்ற சர்வதேச மட்டத்தில் வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைத்துள்ளதையிட்டும் நன்றி தெரிவித்திருந்தனர்.

யூனியன் அஷ்யூரன்ஸ் e-MER மற்றும் டிஜிட்டல் மருத்துவப் பதிவுகள்

# முதன்முறையாக அறிமுகம்



ஜூட் கோம்ஸ்



ருமேஷ் மோதரகே

யூனியன் அஷ்யூரன்ஸ், e-MER (Electronic Medical Examination Report) மற்றும் டிஜிட்டல் மருத்துவ பதிவுகளை அறிமுகம் செய்துள்ளது. காப்புறுதி பத்திரம் வழங்கும் செயன்முறையை துரிதப்படுத்தும் வகையில் இந்தப் புதிய சேவை அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னணி சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் வழங்குநரான டேர்டன்ஸ் வைத்தியசாலையுடன் 2023 ஏப்ரல் 10ஆம் திகதி ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், இந்தச் சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை ஆயுள் காப்புறுதித் துறையில் இந்தச் சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

e-MER மற்றும் டிஜிட்டல் மருத்துவ பதிவுகளினூடாக, காப்புறுதிப் பத்திரம் வழங்கல் செயன்முறையை 15 நிமிடங்களினுள் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் துரிதப்படுத்தக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழமையாக, இந்தச் செயன்முறைக்கு ஒன்றறை நாள்கள் வரையான காலம் தேவைப்படும்.

தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தீர்வுகளின் ஒன்றிணைப்பினூடாக இந்தச் செயன்முறை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குநர்களுடனான ஒப்பற்ற தொடர்பாடல்களை பெருமளவு சௌகரியமாக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினூடாக சில அனுகூலங்கள் ஏற்படுத்தப்படும். வாடிக்கையாளர் தரவுகளின் பிரத்தியேகத்தன்மை, பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் இது அமைந்திருப்பதுடன், பாதுகாப்பான மற்றும் அதிகளவு தங்கியிருக்கக்கூடிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வது மற்றும் முழுமையான மற்றும் துல்லியமான ஆவணப்படுத்தலை ஊக்குவிப்பது போன்றவற்றை மேற்கொள்ள உதவும். மேலும், காப்புறுதி வழங்குநர்கள் மருத்துவ அறிக்கைகளை தம்வசம் வைத்திருக்கக்கூடியதாக இருக்கும். விண்ணப்பதாரியின் மருத்துவ வரலாறு தொடர்பான முழுமையான தோற்றப்பாட்டினூடாக, யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்துக்கு பரிபூரண மற்றும் இடர் மதிப்பீடுகளை மேற்கொள்ள முடிவதுடன், மேம்படுத்தப்பட்ட இடர் வகைப்படுத்தலை வழங்கவும் உதவும்.

மேலும், நிறுவனத்தின் 'Go Green' திட்டத்துக்கமைய, இந்தச் செயன்முறை கடதாசிப் பாவனையற்றதாக அமைந்திருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் காப்புறுதி வழங்குநர்களுக்கு பெருமளவு நேரத்தை மீதப்படுத்திக் கொள்ள முடியும் என்பதுடன், இடர்கள் தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தக்கூடியதாக இருக்கும்.


யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "காப்புறுதி மற்றும் மருத்துவ பிரிவுகளிடையே உறுதியான இணைப்புகள் காணப்படுகின்றன. டிஜிட்டல் உறுதித்தன்மை மற்றும் காப்புறுதி எளிமைப்படுத்தல் ஆகியவற்றில், நிறுவனத்தின் மற்றுமொரு மைல்கல்லை பூர்த்தி செய்வதாக இது அமைந்துள்ளது. சௌகரியம், இலகுத்தன்மை, ஒப்பற்ற வினைத்திறன் போன்றவற்றில் அதிகளவு கவனம் செலுத்தப்பட்டு, புதிய தலைமுறை காப்புறுதி அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் எமது நோக்கத்துக்கமைவாகவும் இது அமைந்துள்ளது" என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம தொழில்நுட்ப அதிகாரியான ருமேஷ் மோதரகே கருத்துத் தெரிவிக்கையில், "e-MER மற்றும் டிஜிட்டல் மருத்துவப் பதிவுகள், தொழிற்றுறையில் புதிய எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும். யூனியன் அஷ்யூரன்ஸ் தொடர்ந்தும் இவ்வாறான டிஜிட்டல் புத்தாக்கங்களை அறிமுகம் செய்து, வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தவும், சேவை நியமங்களை உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு செல்லவும் ஏதுவாக அமைந்திருக்கும். 2024 ஆம் ஆண்டுக்கான நோக்கம், காப்புறுதி வழங்கலில் 90% ஆன பங்களிப்பை தன்னியக்க மயமாக்கலினூடாக மேற்கொள்வது என்பது எதிர்பார்ப்பாகும். இந்த இலக்கை எய்துவதற்கான அடித்தளத்தை யூனியன் அஷ்யூரன்ஸ் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

# SLT-MOBITEL இடமிருந்து 'ONE SHOT'

SLT-MOBITEL மொபைல், புதிய ONE SHOT பக்கேஜை அறிமுகம் செய்துள்ளது. நுகர்வோருக்கு வரையறைகளற்ற அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்தப் பக்கேஜ் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சந்தையில் பல அன்லிமிடட் பக்கேஜ்கள் காணப்பட்ட போதிலும், ONE SHOT பக்கேஜால் நுகர்வோருக்கு எந்த வலையமைப்புக்கும் அன்லிமிடட் அழைப்புகள் மற்றும் SMS, புகழ்பெற்ற சமூக ஊடக கட்டமைப்புகளான Facebook, Instagram, TikTok, Messenger, YouTube மற்றும் WhatsApp ஆகியவற்றை தடங்கலின்றி தொடர்ந்து பயன்படுத்துவதற்கான Nonstop அனுகூலங்களுடன், மாதாந்தம் ரூ.




989 பக்கேஜில் மேலதிகமான 30 GB Anytime Data மற்றும் வாராந்தம் ரூ. 289 பக்கேஜில் 7GB Anytime Data வசதிகள் வழங்கப்படுகின்றன. அவசியமான தொகையை ரீலோட் செய்வதனூடாக, #170# டயல் செய்து அல்லது Self Care App இல் துரிய செயற்படுத்தல் முறையினூடாக ONE SHOT பக்கேஜை செயற்படுத்திக் கொள்ள முடியும்.

SLT-MOBITEL மொபைலுக்கு நுகர்வோர் மாறுவதனூடாக, வலையமைப்பு அல்லது இணையத்தின் வேகம் தொடர்பில் கவலை கொள்ள வேண்டியதில்லை. SLT-MOBITEL மொபைல் வலையமைப்பு, இலங்கையின் வேகமான வலையமைப்பு சேவையாக, தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தது. ONE SHOT பக்கேஜ் உடன், வாடிக்கையாளர்களுக்கு வரையறைகளற்ற இணைய இணைப்பு வசதிகளையும், ஒப்பற்ற பாவனையாளர் அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

புதுடெல்லி

# புதிய பாராளுமன்ற கட்டடம் திறப்பு

புதுடெல்லியில் 971 கோடி ரூபாய் செலவில் அதிநவீன வசதிகளுடன் பிரம்மாண்டமாக கட்டப்பட்ட புதிய பாராளுமன்றக் கட்டடத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்றைய தினம் (28) திறந்து வைத்தார்.

96 ஆண்டுகள் பழைமையான பழைய பாராளுமன்றக் கட்டடத்தில் தற்போதைய தேவைக்கேற்ப போதுமான இடவசதி இல்லாத நிலையில், புதுடெல்லியின் மையப்பகுதியில் புதிய பாராளுமன்றக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில், புதிய பாராளுமன்றக் கட்டடத்தில் பல்வேறு மாநிலங்களில் இருந்து பல்வேறு வகையான பொருட்கள் பெறப்பட்டு கட்டுமானத்திலும், உட்புற அழகை மெருகேற்றுவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.



அந்தவகையில் பாராளுமன்றத் திறப்பு விழாவையொட்டி யாகம் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றதை அடுத்து, பாரம்பரிய முறைப்படி பிரதமர் மோடியிடம் தமிழகத்தின் செங்கோல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது புதிய பாராளுமன்றக் கட்டடத் தோற்றத்துடன் 75 ரூபாய் சிறப்பு நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டு வைத்தார்.

இவ்விழாவில் மத்திய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள், எம்.பிக்கள், கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

# யூ-டியூபர் இர்பானின் கார் மோதியதில் பெண் பலி

யூடியுபர் இர்பானின் கார் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் செங்கல்பட்டில் இடம்பெற்றுள்ளது.

பிரபல யூடியூபரான இர்பான் 'இர்பான் வியூஸ்' எனும் யூடியூப் சேனலை நடத்தி வருகிறார். இதில் பல்வேறு உணவகங்களுக்குச் சென்று அவற்றை சுவைத்து, விமர்சனம் செய்து அதைப் பதிவேற்றி வருகின்றார்.

இந்நிலையில், செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரில் உள்ள நகராட்சி அலுவலகம் அருகே நேற்று முன்தினம் (27) இரவு யூடியூபர் இர்பானுக்கு சொந்தமான சொகுசு கார் ஒன்று மோதி 55 வயதான பத்மாவதி என்ற பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதையடுத்து விபத்தை ஏற்படுத்தும் வகையில் காரை ஓட்டி வந்த அசாருதின் என்பவரைக் கைது செய்து, மறைமலை நகர் பொலிஸார் விசாரணை



நடத்தி வருகின்றனர்.

இந்த விபத்து நடந்த போது யூடியூபர் இர்பான் காரில் இருந்தாரா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சீனா



# சாரதி இல்லாத கார் அறிமுகம்

சாரதி இல்லாத காரொன்றை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது. தென்மேற்கு சீனாவின் குய்சோ மாகாணத்தில் உள்ள குய்யாங் நகரில் நடைபெற்றுவரும் சர்வதேச பிக் டேட்டா இண்டஸ்ட்ரி எக்ஸ்போவிலேயே குறித்த கார் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பார்வையாளர்களின் கவனத்தை அதிகளவில் ஈர்த்து வரும் இக்காரானது ஸ்டீயரிங் மற்றும் ஓட்டுனர் இருக்கை இல்லாமல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இதில் 4 லேசர் ரேடார்கள், 7 கெமராக்கள் மற்றும் 12 மில்லி மீற்றர் அலை ரேடார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

3 நாள்கள் நடைபெறும் இக் கண்காட்சியில் சிறிய ரோந்து கார்கள், 3டி பிரிண்டர் மற்றும் செயற்கை நுண்ணறிவு பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடகொரியா



## 2 வயதுக் குழந்தைக்கு ஆயுள் தண்டனை

இரண்டு வயதான குழந்தைக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் வடகொரியாவில் இடம்பெற்றுள்ளது.

வடகொரியாவில், அண்மையில் பைபிள் வைத்திருந்ததாகப் பிடிபட்ட கிறிஸ்தவர்கள் மரண தண்டனையை எதிர்கொண்டுள்ளதாகவும், அவர்களின் இரண்டுமாத கைக்குழந்தை உள்ளிட்ட பலருக்கும் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச அளவில் நிலவும் மத சுதந்திரம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வட கொரியாவில் பிற மதங்களைச் சேர்ந்தவர்களுடன் 70,000 கிறிஸ்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகவும், சிறை வைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்கள் மோசமான நிலையில் இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

# கொக்கெய்ன் பயன்படுத்தும் இம்ரான்



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், பிரதமர் பதவியில் இருந்து வெளியேறியதில் இருந்து தற்போதைய ஆட்சியாளர்கள் மற்றும் இராணுவத்திற்கு எதிராக தொடர்ந்து போராட்டங்களை மேற்கொண்டு வந்தார்.

பதிலுக்கு இம்ரான் கான் மீதும் ஆளும் அரசு மற்றும் இராணுவம் கடுமையான குற்றச்சாட்டுகளையும் நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இந்நிலையில் கடந்த ஒன்பதாம் திகதி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜராக வந்த போது, அவரை துணை இராணுவமான ரேஞ்சர்ஸ் படையினர் அதிரடியாக கைது செய்து அழைத்துச் சென்றனர்.

இதனைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது. பின்னர் பாகிஸ்தான் நீதிமன்றம் இவ்விவகாரத்தில் தலையிட்ட நிலையில், அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இம்ரான் கான் மற்றும் அவரது கட்சியினர் மீது 120க்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இதில் ஊழல் மற்றும் தேசதுரோக குற்றச்சாட்டுகள் அடக்கம். இந்நிலையில், பாகிஸ்தான் சுகாதாரத்துறை அமைச்சர் அப்துல் குவாதிர் பல்வேறு பரபரப்பு புகார்களை இம்ரான் கான் மீது அடுக்கியுள்ளார்.

அவர் கூறுகையில், "மே 9ஆம் திகதி இம்ரான் கான் கைது செய்யப்பட்ட போது அவருக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது இம்ரான் கான் மது மற்றும் கொக்கெய்ன் போன்ற போதைப்பொருள்களை பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் இருப்பது கண்டறியப்பட்டது என்றார்.

ஜேர்மனிய புண்டெஸ்லிகா தொடர்:

# இறுதி நேரத்தில் முடிசூடிய மியூனிச்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான புண்டெஸ்லிகா தொடரில் இறுதி நேரத்தில் பயேர்ண் மியூனிச் சம்பியனானது.

கொலோனின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் இறுதி நேரத்தில் வென்றமையைத் தொடர்ந்தும், பொரூசியா டொட்டமுண்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், மைன்ஸுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தமையைத் தொடர்ந்தே மியூனிச் சம்பியனாயிருந்தது.

மியூனிச்சும், டொட்டமுண்டும் ஒரேயளவான புள்ளிகளைப் பெற்றிருந்தபோதும், கோலெண்ணிக்கை வித்தியாசத்திலேயே மியூனிச் சம்பியனாயிருந்தது.





காத்தான்குடி கால்பந்தாட்ட லீக் தொடர்:

## சம்பியனானது ஏறாவூர்

எம் எஸ் எம் நூர்தீன்

காத்தான்குடி கால்பந்தாட்ட லீக் தொடரில் ஏறாவூர் கால்பந்தாட்டக் கழகம் சம்பியனானது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட 27 கழகங்கள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியானது காத்தான்குடி விக்டரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோதே பதுரியா விளையாட்டுக் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே ஏறாவூர் சம்பியனானது.

சம்பியனான ஏறாவூருக்கு 25,000 ரூபாயும், பதுரியாவுக்கு 15,000 ரூபாயும் வழங்கப்பட்டதுடன் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.



உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில்

## பதில் வீரராக கைக்வாட்டைப் பிரதியிட்ட ஜைஸ்வால்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்தியக் குழாமில் பதில் வீரராக ஆரம்பத் துடுப்பாட்டவீரர் யஷஸ்வி ஜைஸ்வால் உள்ளடக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமை திருமணத்தைக் கொண்டிருக்கின்ற ருத்துராஜ் கைக்கவாட்டுக்குப் பதிலாகவே ஜைஸ்வால் குழாமில் உள்ளடக்கப்பட்டுள்ளார்.



பிரெஞ்சு லீக் 1 தொடர்:

## சம்பியனான பரிஸ் ஸா ஜெர்மைன்

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், ஸ்ராஸ்பேர்க்கின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியமையைத் தொடர்ந்தே பரிஸ் ஸா ஜெர்மைன் சம்பியனானது.

லீக்கில் இன்னுமொரு போட்டி இருக்கின்ற நிலையில் புள்ளிகள் பட்டியலில் இரண்டாமிடத்திலுள்ள லென்ஸுக்கும் பரிஸ் ஸா ஜெர்மைனுக்குமிடையில் நான்கு புள்ளிகள் வித்தியாசமிருக்கின்ற நிலையிலேயே பரிஸ் ஸா ஜெர்மைன் சம்பியனாக முடிசூடியது.



ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## செவிய்யாவை வென்ற றியல் மட்ரிட்

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், செவிய்யாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் வென்றது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் றொட்றிகோ பெற்றதோடு, செவிய்யா சார்பாகப் பெறப்பட்ட கோலை றாஃபா மிர் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 29 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.